# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2030/46 - 2017 අගෝස්තු මස 04 වැනි සිකුරාදා - 2017.08.04

2030/46 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இல. 44

**2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்**

20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 20(5) இன் கீழ் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, கீழே தரப்பட்டுள்ள அரிசி வகைகளை அவற்றின் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேலாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகஸ்தர்கள் அல்லது வியாபாரிகள் எவரும் விற்பனை செய்யவோ, விற்பனைக்கு விடவோ, விற்பனைக்கு கோரவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதென கட்டளையிடுகின்றது :

| அரிசியின் வகைகள் | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசி ஆகக்கூடுதலான சில்லறை விலை | இறக்குமதி செய்யப்படும் அரிசி ஆகக்கூடுதலான சில்லறை விலை |
|---|---|---|
| சம்பா அரிசி (கீரி சம்பா, சூதுரு சம்பா தவிர்ந்தவை) | ரூபா 90 கி. கிராம் ஒன்றுக்கு | ரூபா 80 கி. கிராம் ஒன்றுக்கு |
| நாடு அரிசி | ரூபா 80 கி. கிராம் ஒன்றுக்கு | ரூபா 75 கி. கிராம் ஒன்றுக்கு |
| பச்சை அரிசி | ரூபா 78 கி. கிராம் ஒன்றுக்கு | ரூபா 65 கி. கிராம் ஒன்றுக்கு |

இக்கட்டளை 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 4 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையானது 2017, பெப்புருவரி 17 ஆந் திகதிய 2006/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியை இக்கட்டளையினால் இரத்துச்செய்கின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் கட்டளைப்படி,

ஹசித்த திலகரட்ன,
தவிசாளர்.

கொழும்பு,
2017, ஓகத்து 04.

08-734

1A - PG 3644 — 207 (2017/08) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.